**Dina Bhoomi, Chennai, Aug 22 2008**



டிசிஎஸ் ஐடி விஸ் 2008

# சென்னை எடிஷன்: பள்ளி மாணவர்களுக்கு லேப்டாப்-கோப்பை பரிசு

சென்னை, ஆக.22-

முன்னணி ஐடி சர்வீசஸ், பிசினஸ் சொல்யூஷன்ஸ் மற்றும் அவுட்சோர்சிங் நிறுவனமான டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (டிசிஎஸ்) நடத்திய டிசிஎஸ் ஐடி விஸ் போட்டிக்கு மாணவர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்தது. சென்னை மியூசிக் அகாடமியில் நடத்தப்பட்ட இந்த ஆண்டின் டிசிஎஸ் ஐடி விஸ் போட்டியில் 1400-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்தியாவின் பள்ளிகளுக்கிடையிலான மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப விநாடி வினா போட்டி இது என்பது குறிப்பிடத்தக்கது.

டிசிஸ் ஐடி விஸ் போட்டியின் 10-வது ஆண்டு விழாவை முன்னிட்டு இந்தியாவில் தொழில்நுட்ப விநாடி வினா போட்டியின் 10 ஆண்டு கொண்டாட்டத்தை நினைவு படுத்தும் வகையில் டிசிஎஸ் நிறுவனத்தின் தலைமை செயல்அதிகாரியும், நிர்வாக இயக்குநருமான ராமதுரை [illegible] என்ற பிரத்யேக இணையதளத்தை அண்மையில் தொடங்கி வைத்தார்.

கடுமையான போட்டிக்கு மத்தியில் பள்ளி மாணவர்கள் வெற்றிக் கோப்பை மற்றும் லேப்டாப் கம்ப்யூட்டரை பரிசாக தட்டிச் சென்றனர். இரண்டாம் பரிசாக கோப்பையும், போர்ட்டபிள் டிவிடி பிளேயர் மற்றும் டிஜிட்டல் கேமரா பரிசாக வழங்கப்பட்டது. தலைமை விருந்தினராக முன்னாள் கிரிக்கெட் வீரரும், தேசிய தேர்வாளருமான வி.பி.சந்திரசேகரும், டிசிஎஸ் நிறுவனத்தின் தலைமை தொழில்நுட்ப அதிகாரியும், துணை தலைவருமான கே.அனந்தகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினர்.

ஆரம்ப எழுத்து தேர்வில் வெற்றி பெற்று பிராந்திய இறுதி சுற்றுக்கு தகுதி பெற்ற 6 அணிகளுக்கு டிசிஎஸ்-ன் பேக்பேக், எம்பி3 பிளேயர்கள் ஹெட்போன்கள், காபி டேபிள், டிக்ஸ் மற்றும் டி ஷர்ட்டும், சென்னையில் முன்னணி ஓட்டல்கள் வழங்கிய கிப்ட் கூப்பன்களும் பரிசாக அளிக்கப்பட்டது. இறுதி சுற்றில் கலந்துகொண்ட 6 அணிகளுக்கிடையிலான கடுமையான போட்டி, புதுமையான முறையில் அமைந்த சுற்றுகள், பிக்பிரைன் என்று அழைக்கப்படும் பிரபல குவிஸ் மாஸ்டர் கிரி பால சுப்பிரமணியன் குவிசை நடத்திய விதம் ஆகியன இந்த குவிஸ் போட்டியை மிகவும் ரசிக்கத்தக்க வகையில் உயர்த்தியது.